முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1287

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

08.04.2023, சனிக்கிழமை

1. ஞானபலம் கொண்ட அரங்கனே
   ஞானிகளின் துணைகொண்ட தேசிகனே
   ஆணவமலம் போக்கி இனிதே
   உலகோர்க்கு அற்புதமான ஞானம் அருளும் குருராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
   (சுபகிருது வருடம் பங்குனி மாதம் 25 ம் நாள், 08.04.2023, சனிக்கிழமை)
   வரமென அரங்கன் திருவடிபற்றி
   வையகத்தில் வலம்வரும் மக்களுக்கு
3. திறம்பட இனிபிறவாப்பெரும் பேறு
   தெய்வ சக்தியாக உறுதியாகும்
   இவர்களையெல்லாம் வென்று இனிதே
   இன்னல்கள் யாவர்க்கும் வாராதவண்ணம்
4. பாதுகாப்புக்கூட்டி அருளும் அரங்கன்
   கொள்கையும் தர்மமுமே உலகை ஆளும்
   மேன்மைபட அரங்கனின் நாமஜெபம் கூறி
   மேலான ஞானவான்கள் தொடர்புகூட்டி
5. காலமெல்லாம் இயன்ற தர்மம் செய்துகொண்டு
   கருணைகொண்டு அரங்கன் திருவடிபற்றி தொடர்ந்துவரும்
   வருகவே வையகத்தில் மாற்றம்உண்டு வடிவேலன் என்வெளிப்பாடு உறுதியாகி
   பெருமைபட பேருலகம் பாதுகாப்புப்பெறும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–